## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# அலங்காநல்லூரில் மாபெரும் ஜல்லிக்கட்டுப் போட்டி!

### மக்கள் வெள்ளத்தில் நிரம்பி வழிந்த கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம்!








கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்டம், மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டுப் போட்டியினை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி உறுதிமொழி ஏற்றபின் கொடியசைத்து துவக்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு தங்கக் காசுகள், சைக்கிள், மிக்ஸி உள்ளிட்ட பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று போட்டியினை உற்சாகத்துடன் கண்டு ரசித்தனர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

## மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் க.பொன்முடி - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு! மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், பிப்.12-

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் இன்று (12.02.2025 - புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, கழக துணைப் பொதுச்செயலாளர் - கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.



மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் திருமதி நாமக்கல் ப.ராணி , மாநில மகளிர் தொண்டர் அணி இணை செயலாளர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், மாநில மகளிர் அணி சமூக வலைத்தள பொறுப்பாளர் முனைவர் அ.ரியா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில், விழுப்புரம் (தெற்கு) மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த மாநில - மாவட்ட - ஒன்றிய - பேரூர் - கிளைக் கழக மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், கழக மகளிர் - மகளிர் தொண்டர் அணியினர் திரளாக கலந்துகொள்ளுமாறும்

நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில - மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழக செயலாளர்கள் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தி.மு.க. தலைமை நிலையச் செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் நேற்று முன்தினம் (10.02.24) மதுரையில் நடைபெற்ற மதுரை வடக்கு மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம் – கலாவதி ஆகியோரின் மகன் எம்.ஆர்.எம். பி.சரவணன் – ஆர்.சுரபி திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் வாழ்த்து மடல் வாசிக்கப்பட்டு வழங்கப்பட்டது. இதில் இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், அரசு இசைப்பள்ளி கலையியல் அறிவுரைஞர் ஜாகிர் உசேன், பழங்காநத்தம் பகுதிச் செயலாளரும், கவுன்சிலருமான சுதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.